

நெல்லை மேற்கு மாவட்டம் சேரன்மகாதேவி மேற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் அம்பாசமுத்திரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் சம்பந்தமாக பொது உறுப்பினர்கள் கூட்டம் புதுக்குடி மெயின் ரோடு மீனாட்சி மகாலில் ஒன்றிய அவைத் தலைவர் வெங்கடேசன் தலைமையில் மாவட்ட பிரதிநிதிகள் பூதத்தான்,சீவலமுத்து என்ற குமார், ஒன்றிய துணைச் செயலாளர்கள் சொரிமுத்து,பிரேமா,கண்ணன், பொருளாளர் சின்னத்துரை ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. சேரன்மகாதேவி மேற்கு ஒன்றிய செயலாளர் எம்.முத்துகிருஷ்ணன் வரவேற்றார்.இந்நிகழ்வில் நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா. ஆவுடையப்பன் பங்கேற்று கருத்துக்களை கேட்டறிந்து அம்பை சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் வெற்றி பெறுவது குறித்து பல்வேறு ஆலோசனைகளை வழங்கி விரிவான உரையாற்றினார். உடன் ஆ.பிரபாகரன், கணேஷ் குமார் ஆதித்தன், மைக்கேல், செல்வ கூடாமணி (வழக்கறிஞரணி) பிரேம்குமார் (தகவல் தொழில்நுட்ப அணி) சாலமன் டேவிட் உள்பட அணி அமைப்பாளர்கள்,பேரூர் செயலாளர்கள்,ஒன்றிய குழு உறுப்பினர்கள்,கிளை கழக செயலாளர் கள்,ஒன்றிய இளைஞரணி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் உட்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சி நிறைவில் மாவட்ட அயலக அணி அமைப்பாளர் பீர்முகம்மது நன்றி கூறினார்.



நெல்லை மேற்கு மாவட்டம் அம்பாசமுத்திரம் நகர தி.மு.க.சார்பில் அம்பை நகராட்சி திருமண மண்டபத்தில் நடைபெற்ற பொது உறுப்பினர் கூட்டத்தில் தீபாவளி திருநாளை முன்னிட்டு நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா. ஆவுடையப்பன் 21 வார்டுகளை சேர்ந்த கழக நிர்வாகிகள் ஆண்களுக்கு வேஷ்டியும்,பெண்களுக்கு சேலையும் மற்றும் இனிப்பு ஆகியவற்றை வழங்கினார்.நிகழ்வில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆ.பிரபாகரன்,தலைமைச் செயற்குழு உறுப்பினரும், நகர செயலாளருமான கே.கே.சி. பிரபாகரன்,மாநில தொண்டர் அணி துணை செயலாளர் ஆவின் ஆறுமுகம், மாநில விவசாய தொழிலாளரணி துணைச் செயலாளர் கணேஷ் குமார் ஆதித்தன், வி.கே.புரம் நகர செயலாளர் கணேசன்,முன்னாள் அரசுவழக்கறிஞர் காந்திமதிநாதன் உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

காசிமேடு மீனவர்கள் உயிரிழப்பு!

கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. இரங்கல்!

சென்னை, நவ. 7-

கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. விடுத்துள்ள இரங் கல் செய்தி வருமாறு:-

முரசு புயலில் சிக்கி சென்னை காசிமேடு மீன வர்கள் உயிரிழந்த செய்தி வேதனையளிக்கிறது. அவர் களை இழந்து தவிக்கும் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

மீனவர்கள் காணாமல் போனதாகத் தகவல் தெரி வித்தும் நடவடிக்கை எடுக் காதது ஏன்? இத்துயரத்திற் குப் பிறகும் மீன்வளத்துறை அமைச்சர் அம்மக்களைச் சந்திக்க வராதது ஏன்?

பேரிடர் காலத்திலும் அலட்சியமாகச் செயல் பட்ட த.வெ.க. அரசு இத்து யரத்திற்கு உடனடியாகப் பொறுப்பேற்று, உயிரிழந்த மீனவர்களின் குடும்பங் களுக்கான நிவாரணத்தை உயர்த்தி வழங்க வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித் துள்ளார்.

வழிப்பறி வழக்கில் விசாரணைக்கு அழைத்து வரப்பட்ட சிறுவன்

காவல் நிலையத்திலிருந்து தப்பி ஓட்டம்!

வானகரத்தில் தனிப்படை அமைத்து போலீசார் தேடுதல் வேட்டை!

சென்னை, நவ. 7–

வழிப்பறி வழக்கில் விசார ணைக்கு அழைத்து வரப்பட்ட சிறு வன் காவல் நிலையத்திலிருந்து தப்பினான். அவரை தனிப்படை அமைத்து போலீசார் தீவிரமாக தேடிவருகின்றனர். தாம்பரம்மதுர வாயல் பைபாஸ் சாலை, வானக ரம் சர்வீஸ் சாலையில் இரவு நேரங்களில் தனியாக செல்பவர் களை குறிவைத்து வழிமறித்து செல்போன்கள், செயின் பறிப்பு சம்பவங்கள் அடிக்கடி நடைபெற்று வந்தன. இதுகுறித்து வானகரம் போலீசாருக்கு தொடர்ந்து புகார் கள் வந்த வண்ணம் இருந்தது. இந்நிலையில் தீவிர வாகன சோதனை மற்றும் ரோந்து பணி யில் ஈடுபட்ட போலீசார் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வந்த னர். மேலும் வானகரம் போலீசார் தனிப்படைகள் அமைத்தும் தீவிர மாக கண்காணித்து வந்தனர்.

இந்நிலையில் பைக்கில் சென் றவரை வழிமறித்து செல்போன் வழிப்பறி சம்பவத்தில் ஈடுபட்டதாக முகப்பேர் பகுதியைச் சேர்ந்த விக் னேஷ் (20) மற்றும் 17 வயது சிறு வன் ஒருவனையும் போலீசார் மடக்கி பிடித்து விசாரணைக்காக வானகரம் காவல் நிலையத்திற்கு இரு சக்கர வாகனத்தில் நேற்று அழைத்து வந்தனர். வானகரம் காவல் நிலைய வாசலில் வந்தவு டன் சிறுவனை விசாரணைக்காக இரு சக்கர வாகனத்திலிருந்து இறங்கி போலீஸ் நிலையத்திற்குள் அழைத்துச் செல்ல முயன்றனர். அப்போது திடீரென போலீசாரின் கையை உதறி தள்ளிவிட்டு போலீஸ் பிடியிலிருந்து அந்த சிறு வன் மின்னல் வேகத்தில் அங்கி ருந்து தப்பிச் சென்றான்.

இதனை கண்டதும் பணியில் இருந்த போலீசார் அந்த சிறு வனை விரட்டி சென்று பிடிக்க முயன்றனர். ஆனால் அந்த சிறு வன் போலீசாரின் கைகளில் சிக் காமல் தப்பி ஓடிச் சென்று விட் டான். இதையடுத்து வானகரம் போலீசார் தனிப்படைகள் அமைத்து காவல் நிலையத்தி லி ருந்து தப்பி ஓடிய சிறுவனை தேடி வருகின்றனர். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் உள்ள சுங்கச் சாவடி மற்றும் செக்போஸ்ட் உள் ளிட்ட பல்வேறு பகுதிகளில் உஷார் படுத்தப்பட்டு போலீசார் தீவிரமாக தேடி வருகின்றனர். மேலும் விசா ரணைக்காக அழைத்து வரப்பட்டு தப்பி ஓடிய சிறுவன் மீது பல்வேறு வழிப்பறி வழக்குகள் இருப்பது குறிப்பிடத்தக்கது. வழிப்பறி வழக் கில் விசாரணைக்காக அழைத்து வரப்பட்ட சிறுவன் காவல் நிலை யத்திலிருந்து தப்பிச்சென்ற சம்ப வம் பரபரப்பை ஏற்படுத்தி உள் ளது. த.வெ.க. ஆட்சி அமைந்த பிறகு சிறைச்சாலை மற்றும் காவல் நிலையங்களில் இருந்து கைதிகள் தப்பிச் செல்வது தொடர் கதையாக உள்ள நிலையில் வான கரம் காவல் நிலையத்தில் இருந்து விசாரணைக் கைதி தப்பி சென்ற சம்பவம் போலீசார் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஏ.விஜயகுமார் ஏற்பாட்டில்

அயோத்தியா பட்டணத்தில் 1000 கழக நிர்வாகிகளுக்கு புத்தாடை - இனிப்பு!

மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி. வழங்கினார்!

சேலம், நவ. 7-

சேலம் கிழக்கு மாவட் டம் அயோத்தியாபட்ட ணம் தெற்கு ஒன்றிய தி.மு.க சார்பில் 1000 கழக நிர்வாகிகளுக்கு பண்டிகை முன்னிட்டு முன்னாள் ஒன் றிய குழு தலைவரும், ஒன் றிய செயலாளருமான ஏ. விஜயகுமார் ஏற்பாட்டில் புத்தாடைகள் மற்றும் இனிப்புகளை மாவட்ட செயலாளர் எஸ். ஆர். சிவ லிங்கம் எம்.பி. வழங்கினார்.

நிகழ்ச்சியில் ஒன்றிய துணைச் செயலாளர்கள் ஹரி அய்யாதுரை, காந்தி மதி சின்னச்சாமி, மாவட்ட பிரதிநிதிகள் அக ரம் ராஜேந்திரன், பொன் னுமலை, இன்பராசு, மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளரும் முன்னாள் ஒன்றிய துணைத் தலைவர் ஏ. செந் தில்குமார், மாவட்ட நெச வாளர் அணி அமைப்பா ளர் ஏ.ஏ.ஆறுமுகம், முன்னாள் பேரூராட்சி செயலாளரும் கவுன்சிலரு மான சரவணன், மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளரும், கவுன்சி லருமான தேவன், மாவட்டப் பிரதிநிதி தீன தயாளன், பேரூராட்சி துணைச் செயலாளர் நர சிம்மன், பேரூராட்சி கவுன் சிலர்கள் புவனேஸ்வரி பிர பாகரன், பிரேமா தன சேகரன்,

மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் நட ராஜ், மாவட்ட மாணவ ரணி துணை அமைப்பா ளர் மகேஸ்வரன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் படையப்பா (எ) முருகன், மஞ்சுளா ரவிச்சந்திரன், குண சேக ரன், காசிலிங்கம், நாக ராஜ், அலமேலு ராஜரத்தி னம், முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர் அண்ணா துரை, பரமேஸ்வரன், முன் னாள் ஒன்றிய துணைச் செயலாளர் வெங்கடேசன், ஒன்றிய தொழிலாளர் அணி அமைப்பாளர் மோகன், ஒன்றிய இலக் கிய அணி அமைப்பாளர் ராகுல், ஒன்றிய இளைஞ ரணி துணை அமைப்பா ளர் மோகன்ராஜ், ஒன்றிய மகளிர் அணி அமைப்பா ளர் வெண்ணிலா வெங்க டாஜலம், துணை அமைப் பாளர் அன்னக்கொடி, மாலதி, ஒன்றிய மாணவ ரணி துணை அமைப்பா ளர் ராஜ்குமார், ஒன்றிய ஆதிதிராவிடர் நலக்குழு துணை அமைப்பாளர்கள் காங்கிரத்தினம், அண்ணா மலை, ஒன்றிய தொண்ட ரணி அமைப்பாளர் சதீஷ் குமார், ஒன்றிய வர்த்தக அணி துணை அமைப்பா ளர் ராஜீவ் காந்தி, சதீஷ் குமார், பிரபு, செந்தில், வீரன், ராஜா, ஜெயவேல், ஒன்றிய தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் முத்துக்குமார் உள்ளிட் டோர் கலந்து கொண்ட னர்.

செஞ்சியில் ரூ.1.60 கோடியில் கட்டப்பட்ட அறிவுசார் மையம்!

ஆரணி எம்.பி. தரணி வேந்தன் திறந்து வைத்தார்!

செஞ்சி, நவ 7–

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி பேரூராட்சியில் 1கோடியே 60 லட் சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய அறிவுசார் மைய்ய கட்டடத் தில் ஆரணி நாடாளுமன்ற உறுப் பினர் எம்.எஸ்.தரணிவேந்தன் செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப் பினர் கணேஷ்குமார், செஞ்சி பேரூராட்சி மன்றத் தலைவர் மொக்தியார் அலிமஸ்தான் ஆகி யோர் திறந்து வைத்தனர்.

கடந்த திமுக ஆட்சியில் தமி ழக அரசு 2024ம் ஆண்டு நகர்ப் புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் செஞ்சி உட்பட 13 பேரூராட்சிக ளில் ரூ.20.44 கோடி மதிப்பில் அறிவுசார் மையங்கள் அமைக்கப் படும் என அறிவித்தது. அதன்படி செஞ்சி மேல்களவாய் சாலையில் ரூ.1.60 கோடி மதிப்பில் வாசிப்பு அறை, நூலகம், கணினி, இணைய வசதி, ஸ்மார்ட் வகுப்பறை உள் ளிட்ட வசதிகளுடன் அறிவுசார் மையம் கட்டுவதற்கு முன்னாள் அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ் தான் அடிக்கல் நாட்டினார்.

கட்டிடப் பணிகள் முடிந்து மின் இணைப்பும் வழங்கப்பட்டு அனைத்து வசதிகளும் தயார் நிலையில் உள்ள அறிவு சார் மையம்கட்டிடம் திறப்பு விழா நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது.

அரசு சார்பில்விழுப்புரத்தில் இருந்து காணொளி காட்சி வாயி லாக அறிவு சார் மையம் கட்டிடம் திறக்கப்பட்டது.

இதை அடுத்து செஞ்சியில் உள்ள அறிவு சார் மைய கட்டிடம் திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெற் றது நிகழ்ச்சிக்கு செஞ்சி பேரூ ராட்சி மன்றத் தலைவர் மொக்தி யார் அலிமஸ்தான் தலைமை தாங்கினார் செயல் அலுவலர் ஷேக் லத்திப் அனைவரையும் வரவேற்றார் நிகழ்ச்சியில் ஆரணி நாடாளுமன்ற உறுப்பினர் எம். எஸ்.தரணி வேந்தன் செஞ்சி சட்ட மன்றத் தொகுதி உறுப்பினர் கணேஷ் குமார் ஆகியோர் கலந்து கொண்டு குத்து விளக்கு ஏற்றி வைத்து அறிவு சார் மையக் கட்டி டத்தை மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்தனர் தொடர்ந்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கி னர்.

இதில் மேல்மலையனூர் கிழக்கு ஒன்றியச் செயலாளர் நெடுஞ்செழியன், செஞ்சி பேரூ ராட்சி மன்ற துணைத் தலைவர் ராஜலக்ஷ்மி செயல் மணி, நகரச் செயலாளர் கார்த்திக், முன்னாள் மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழு மலை, பேரூராட்சி மன்ற கவுன் சிலர்கள், முன்னாள் கவுன்சிலர் கள், பேரூராட்சி மன்ற பணி யாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மீனவர்களின் உயிர்களைக் காவு வாங்கியது:

காசிமேடு மீனவச் சொந்தங்களின் இந்தக் கண்ணீர்க் குரல் த.வெ.க. அரசின் கையாலாகாத்தனத்திற்கு சாட்சியாக நிற்கிறது!

தி.மு.க. ஐ.டி.விங் சமூக வலைதளப் பதிவு!

சென்னை.நவ.7-

பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமைச் செயலகத் திட்டத்திற்காக மீனவர்களின் வாழ்வாதாரத்தை அழிக்கத் துணிவது முதல். கடலில் உயி ருக்குப் போராடும் மீனவர் களைக் காப்பாற்ற வக்கில்லா மல் விட்டது வரை. மீனவச் சமு தாயத்தைத் த.வெ.க. அரசு வெறும் ஏமாளிகளாகவும், அலட்சியப்படுத்தப்பட வேண்டி யவர்களாகவும்தான் பார்ப்ப தன் காரணம் என்ன?

காசிமேடு மீனவச் சொந்தங் களின் இந்தக் கண்ணீர்க் குரல்



த.வெ.க. அரசின் கையாலாகாத் தனத்திற்கு சாட்சியாக நிற்கிறது!

கடலில் சிக்கிய மீனவர்கள் GPS Live Location-னுடன் "படகு மூழ்கப் போகுது" என்று SOS செய்தி அனுப்பி மீனவர் கள் கதறியும். "இரவு 6 மணி ஆகிவிட்டது. நாளைக்குத் தேடு வோம்" என்று ஆபீஸ் நேரக் கணக்கு பார்த்து மீனவர்களின் உயிர்களைக் காவு வாங்கியது த.வெ.க. அரசு!

உயிர்கள் கடலில் பலியான பிறகு. கேமராக்களுடன் காசி மேட்டிற்கு வந்த அமைச்சரைப் பார்த்து "உயிர் போன பிறகு தான் வருவீங்களா?" என்று மீனவப் பெண்கள் காறி உமிழ்ந்ததில் எந்தத் தவறும் இல்லை!

இவ்வாறு தி.மு.க. ஐ.டி.விங் கேள்வி எழுப்பியுள்ளது.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

வரத. கோபாலகிருஷ்ணன்
நவம்பர் 7 (2001)



திருவாரூர் மாவட்டக் கழகப் பொருளாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், ஒன்றியப் பெருந்தலைவர் உள்ளிட்ட பொறுப்புகளை வகித்தவர்.

நன்னிலம் பகுதியில் கழகம் வளர்க்க பாடுபட்டவர். வாழ்நாள் முழுவதும் இயக்கப் பணிகளுக்காக தன்னையே அர்ப்பணித்தவர்.

நெருக்கடி நிலையின்போது ஓராண்டு சிறைவாசம். மேலும், கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

வங்கக்கடலில் மீண்டும் குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி!

சென்னை, நவ. 7–

வங்கக்கடலில் வரும் 13ஆம் தேதி குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாக வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித் துள்ளது.

தமிழ்நாட்டின் பல்வேறு பகுதி களில் வடகிழக்கு பருவமழை பெய்து வருகிறது. இதற்கிடையே, அரபிக்கடல் பகுதியில் நிலவும் காற் றழுத்த தாழ்வுப்பாதை காரணமாக தமிழகத்தில் அடுத்த 7 நாட்களுக்கு மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித் திருந்தது. இந்நிலையில், வரும் 13 ஆம் தேதி வளிமண்டல மேலடுக்கு சுழற்சியின் காரணமாக தென்கி ழக்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய அந்தமான் கடல் பகுதியில் குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாக வாய்ப்புள்ளதாகவும், இந்த தாழ்வுப்பகுதி, காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித் துள்ளது. வடகிழக்கு பருவமழை தொடங்கியதில் இருந்து வங்கக்கட லில் இதுவரை 3 காற்றழுத்த தாழ் வுப்பகுதிகள் உருவாகின, அதில் 2 புயலாக வலுப்பெற்று ஆந்திர பகுதி களில் கரையை கடந்தது குறிப்பிடத் தக்கது.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

க. வேல்சாமி
நவம்பர் 7 (2007)



இளம் வயதிலேயே கழகக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு கழகப் பணியாற்றியவர்.

நாமக்கல் மாவட்டம், மோகனூர் பகுதியில் முதன்முதலாக பல்வேறு கிளைக் கழகங்களை அமைத்தவர்.

மோகனூர் கிளைக் கழகம் அமைத்து, அதன் செயலாளர் பின்னர் மாவட்ட பிரதிநிதி என பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

1996ல் நாமக்கல் தொகுதியில் கழக சட்டமன்ற உறுப்பினராக போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.